மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.111/2023</u>

2025 ம் ஆண்டு நவம்பர் 05 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.11.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. இந்த வழக்கில் 1ம் வாதி செல்லமுத்து என்பவருக்கு தான் மரகதம் என்பவரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது சொத்துக்கள் சேர வேண்டும் என்று ஒரு மனதாக பேசி முடிக்கப்பட்டதாக சொல்லி தான் இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம். இந்த வழக்கில் 2 முதல் 4 வாதிகளாகிய நாங்கள் மரகதம் விட்டு சென்ற சொத்துக்களை பொறுத்து எவ்வித பரிகாரங்களும் எங்களுக்கு ஆதரவாக நாங்கள் கேட்கவில்லை என்றால் சரிதான்.

2. இந்த வழக்கின் 2, 3 பிரதிவாதிகள் இந்த வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் வெள்ளகோவில் தான் வசித்து வந்தார்கள் என்றால் இல்லை கணபதி பாளையத்தில் வசித்து வந்தார்கள். 2, 3 பிரதிவாதிகள் கணபதி பாளையத்தில் வசித்து வந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் இந்த வழக்கில் அழைப்பாணையை

2, 3 பிரதிவாதிகளுக்கு வெள்ளகோவில் முகவரியில் வைத்து தான் நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டுள்ளது அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. மரகதம் என்பவர் 2ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனாருடன் பிறந்த சொந்த அத்தை என்றால் சரிதான்.

3. ராஜரத்தினம் என்பவரின் சகோதரி தான் 2ம் பிரதிவாதியின் தாயார் என்றால் சரிதான். மரகதம் மற்றும் ராஜரத்தினம் ஆகியவர்கள் இறக்கும் வரை ஒன்றாக தாவா சொத்தில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்குள் இறக்கும் வரை எவ்விதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை என்றால் சரிதான். ராஜரத்தினமும், மரகதமும் உயிரோடு இருந்த காலத்தில் அவர்களுக்கு வாரிசுகள் இல்லாததால் அவர்கள் தங்களுக்குள் பேசி முடித்து தான் முடிவுகளை எடுத்து வந்தார்கள் என்றால் சரிதான்.

4. ராஜரத்தினமும், மரகதமும் எண்ணையோ என் சகோதர சகோதரிகளையோ சட்டப்படி தத்து எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் திண்டுக்கல் சத்திரப்பட்டியில் என் தாயாரோடு வசித்து வந்தார் என்றால் சரிதான். நானும் என் சகோதர சகோதரிகளும் தாவா சொத்து அமைந்துள்ள ஊரில் வசிக்காமல் வெளியூரில் வசித்து வந்தோம் என்றால் எனது அண்ணன் செல்லமுத்து மற்றும் வீரமுத்து ஆகியோர்கள் வெள்ளக்கோவிலில் என் பெரியப்பாவோடு வசித்து வந்தார்கள். மொத்தம் 6 உயிலில் ராஜரத்தினம், முதல் உயில் தன் மனைவிக்கு தான் எழுதினார் என்றால் சரிதான்.

5. ராஜரத்தினம், தன் மனைவி மரகதம் என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுத்த உயிலில் தனது மனைவிக்கு அந்த சொத்துக்களை பொறுத்து முழு உரிமையும் கொடுத்து உயில் ஆவணத்தை

ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இறக்கும் வரை வாடகை முதல் கொண்டு அனைத்தும் வாங்கிக் கொள்ளலாம் என்றும், இறந்ததிற்கு பின்னிட்டு அந்த சொத்து செல்லமுத்துவுக்கு சேர வேண்டும் என்று என் பெரியப்பா சொல்லி நாங்கள் ஒருமனதாக பேசி முடித்தோம் என்னிடம் காட்டப்படும் மரகதத்திற்கு ராஜரத்தினம் எழுதிக் கொடுத்த உயில் ஆவணத்தில் மரகதம் உயிலில் கண்ட சொத்துக்களை தானாதி வினியோக விற்கிரையங்ளுக்கு யோகியமாய் அனுபவித்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்த சொத்தில் மரகத தவிர வேறு யாருக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றும் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

6. நான் சொல்வது போல் மரகதத்திற்கு ராஜரத்தினம் ஏற்படுத்திக் கொடுத்த உயில் ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக எவ்வித வாய்மொழி சரத்துக்களும் பேசி முடிக்கப்படவில்லை என்றும் அவ்வாறு பேசி முடிக்கப்பட்டதாக நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ராஜரத்தினம் 2 முதல் 4 வாதிகள் மற்றும் ஒரு சரவணன் மற்றும் செல்லம்மாள் ஆகியோர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த உயில் ஆவணத்தில் அதில் கண்ட சொத்துக்களை ராஜரத்தினத்தின் மனைவி ஆயுள் பரியந்தம் வரை அனுபவம் செய்து வந்து அதில் வரும் வாடகையும் வாங்கிக் கொள்ள வேண்டும் என்றும், அவரது காலத்திற்கு பின்னிட்டு உயில் சொத்துக்கள் மேற்படி நபர்களுக்கு சேர வேண்டும் என்றும் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. சரவணன் யார் என்றால் அவர் ராஜரத்தினத்திற்கு பேரன் உறவு முறை மரகதம் என்பவருக்கு ராஜாத்தினம் எழுதிக் கொடுத்த உயில்

ஆவணத்தில் நான் மூன்றாவது சாட்சியாகவும் மற்ற சாட்சிகளாக வீரமுத்து மற்றும் வீரமுத்துவின் மனைவியும் எனது மனைவியும் சாட்சி கையப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் 1ம் பிரதிவாதி 1வது சாட்சியாக கையப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் மரகதத்திற்கு உயில் ஆவணத்தின் மூலம் கொடுக்கப்பட்ட சொத்தானது அவரது ஆயிலுக்கு பின்னிட்டு செல்லமுத்து என்பவருக்கு சேர வேண்டும் என்ற எங்களுக்குள் பேசி முடிக்கப்பட்டு இருந்தது என்பது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதை பொருத்து கண்டிப்பாக உயில் ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கும் என்றும், ஆனால் அவ்வாறு எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும் மரகதத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் வழக்கிற்காக வாய்மொழி சரத்துக்கள் பேசி முடிக்கப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. ராஜரத்தினம் உயில் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்ததன் அடிப்படையில் அந்த சொத்துக்கள் மரகதத்திற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். ராஜரத்தினம் என்பவர் இந்த வழக்கின் 1ஆம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த உயில் ஆவணத்தை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். மரகதத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்த உயில் ஆவணத்தை தவிர மற்ற உயில் சாசனங்களில் மரகதம் ஒன்னாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

9. எங்கள் பெரியப்பா விருப்பத்திற்காக அதை நாங்கள் ஒப்புக்கொண்டோம். மரகதம் எங்களுடன் எப்பவும் வசித்ததில்லை

என்றால் சரியல்ல மரகதம் எங்களோடு வசித்து வந்தார் என்பதை காண்பிக்க கூடிய ஆவணங்கள் எதுவும் எங்கள் வசம் இல்லை என்றால் சரியல்ல. என் இரு அண்ணன்களும் மரகதோடு தான் இருந்து அவரை பார்த்துக் கொண்டார்கள் மரகதம் எப்போதும் என்னோடோ அண்ணன்களோடோ வசித்து வரவில்லை என்றும் நான் வழக்கிற்காக எங்களுடன் வசித்து வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

10. மரகதம் எப்போது காலமானார் என்றால் 16.04.2022 ல் காலமானார். மரகதம் கணபதி பாளையத்தில் உள்ள 1ம் பிரதிவாதி வீட்டில் வைத்து காலமானார் என்றால் சரிதான். மரகதம் 1ம் பிரதிவாதியோடு வசித்து வந்த காரணத்தினால் தான் அவரது வீட்டில் வைத்து காலமானார் என்று சொன்னால் சரியல்ல. நானோ என் சகோதரர்களோ மரகத்தை வந்து பார்க்கவும் இல்லை அவருடைய இறப்பு காரியத்திற்கு கூட நாங்கள் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. நாங்கள் தான் அனைத்து காரியங்களையும் மரகதத்திற்கு செய்தோம். மரகதம் உயிரோடு இருந்த காலத்தில் வழக்கு சொத்தில் இருந்து அவரை வாடகை பெற விடாமல் வாடகைதாரர்களை காலி செய்யச் சொல்லி நான் மற்றும் எனது சகோதரர்கள் இடைஞ்சல் செய்ததால் மரகதம் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.42/2016 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்தது உண்மைதான் ஆனால் அது பொய் வழக்கு. அந்த வழக்கில் நாங்கள் வழக்கறிஞர் மூலம் எதிர்வாதம் செய்தோம் என்றால் ஆமாம்.

12 அந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்திருந்த எதிர்வாதத்தில் மரகதம் காலமாகும் வரை தாவா சொத்தில் அவரது அனுபவத்தை இடைஞ்சல் செய்யவில்லை என சொல்லி இருந்தோம் என்றால் ஆமாம். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் மரகதம் காலமாகிவிட்டார் என்றால் ஆமாம். மேற்படி மரகதம் எங்கள் பராமரிப்பில் இருந்ததால் அவர் வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை நான் சொல்வது உண்மை அல்ல என்றும் மரகதம் இறந்ததற்கு பின்னிட்டு 22.07.2022 தேதியில் தான் அவர் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.42/2016 வழக்கு ஆனது தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

13. மரகதம் எங்கள் பாதுகாப்பில் இருந்ததாக நான் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மரகதம் எங்கள் பாதுகாப்பில் இருந்திருக்கும் பட்சத்தில் அவர் எங்கள் மீது வழக்கு போட வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றும், நானும் என் சகோதரர்களும் வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக எதிர் வாதம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. மரகதம் எங்கள் பாதுகாப்பில் இருந்திருக்கும் பட்சத்தில் அவர் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.42/2016 வழக்கை நாங்கள் அவரை அழைத்து வந்து வாபஸ் வாங்கியிருக்கலாம் என்றும் ஆனால் அவ்வாறு எதுவும் செய்யாததாலே அவர் எங்கள் பாதுகாப்பில் இல்லை என்பது தெரிய வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

14. மரகதம் இறந்துவிட்டார் என்பதை பயன்படுத்திக் கொண்டு நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல. மரகதம் தனது இறுதி காலத்தில் நல்ல மனநிலையோடு இருந்து வந்தார் என்றும் அவருக்கு மனநிலை பாதிக்கப்பட்டு விட்டது என்று நாங்கள் சொல்வதே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தான் என்று சொன்னால் சரியல்ல. மரகதத்திற்கு நாங்கள் சொல்வது போல் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தால் ராஜரத்தினம் எங்களுக்கு எழுதிக் கொடுத்த உயில் ஆவணத்தில் அவர் சாட்சியாக கையொப்பம் செய்திருக்க மாட்டார் என்று சொன்னால் சரியல்ல.

15. மரகதம் உயிரோடு இருந்த காலத்தில் அவர் என்னென்ன ஆவணங்களை ஏற்படுத்தினார் என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால் அவர் எங்கள் பாதுகாப்பில் தான் இருந்தார் நாங்கள் இல்லாத சமயத்தில் ரேகையை உருட்டி பொய்யாக உயில் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். நான் சொல்வது உண்மை அல்ல என்றும் மரகதம் தனது சொந்த விருப்பத்தில் மூன்றாம் பிரதிவாதிக்கு பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்த உயில் ஆவணத்தை ஏற்படுத்தி 3ம் பிரதிவாதிக்கு தனது சொத்துக்களை பாத்திப்படுத்தி விட்டு காலமாகிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

16. மரகதம் மூன்றாம் பிரதிவாதிக்க ஏற்படுத்தி கொடுத்த உயிர் ஆவணம் சம்பந்தப்பட்ட விவரங்கள் எங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் பெரியம்மா இறந்ததற்கு பின்னிட்டு தான் அந்த உயிலைப் பற்றி எங்களுக்கு தெரிய வந்தது மரகதம் தனது சொத்துக்களை 3ம் பிரதிவாதிக்கு கொடுத்து விட்டார் என்ற காரணத்தினால் தான் நாங்கள் அவரை கடைசி காலத்தில் பராமரிக்கவும் இல்லை அவரது இறுதி காரியத்திற்கு வரவும் இல்லை

என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கணபதி பாளையத்திற்கு வரவும் இல்லை மரகதத்தின் இறுதி ஊர்வலத்தில் பங்கெடுக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் நேராக மரகதத்தின் உடல் தகனம் செய்யப்பட்ட இடத்திற்கு வந்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. மரகதம் உயிரோடு இருந்தவரை ராஜரத்தினம் எனக்கும் என் சகோதரர்களுக்கும் ஏற்படுத்தி கொடுத்த உயில் ஆவணங்கள் அனைத்தும் மரகதம் வசம் இருந்தது என்றால் சரிதான்.

17. மரகதம் தான் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.42/2016 வழக்கில் 2 முதல் 4 வாதிகளுக்கு எழுதிக் கொடுத்து இருந்த உயில் ஆவணத்தை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மரகதம் இறந்ததற்கு பின்பு தான் நாங்கள் 2ம் பிரதிவாதி வசம் இருந்த எங்கள் உயில் சாசனங்களை வாங்கினோம் என்றால் இல்லை, நீதிமன்றத்தில் இருந்து அதை எடுத்தோம் நாங்கள் உயில் ஆவணங்களை எடுத்துக் கொண்ட விபரம் தேவராஜ் தெரியுமா என்றால் நாங்கள் எங்கள் வழக்கறிஞர் மூலமாக அதை எடுத்தோம். அவருக்கு தெரியுமா தெரியாதா என்று எனக்கு தெரியாது தேவராஜ் கொடுக்க சொன்னதன் அடிப்படையில் தான் எங்களுக்கு உயில் ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்றால் அது எங்களுக்கு தெரியாது.

18. எங்கள் பெயரில் ஆவணங்களை பெற்றுக்கொண்டு நான் 1 முதல் 3 பிரதிவாதிகளையும் பழி வாங்குவதற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. ராஜரத்தினம் எப்போது இறந்தார் என்றால் 05.08.2015 ல் இல் இறந்தார். ஆனால் எங்கள் வழக்குறையில் 17.08.2015 இல் இறந்ததாக சொல்லி

உள்ளோம் என்றால் அது எனக்கு தெரியவில்லை. ராஜரத்தினம், மரகதம் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு இடையே நல்ல சுமுகமான உறவுமுறைதான் இருந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வெள்ளகோவில் அருகே கணபதிபாளையத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

19. ராஜரத்தினம் மரகதம் உயிரோடு இருக்கும் காலகட்டத்தில் முழுக்க முழுக்க 1 முதல் 3 பிரதிவாதிகளின் பராமரிப்பில் தான் இருந்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ராஜரத்தினம் உயிரோடு இருந்த காலத்தில் 1ம் வாதிக்கு எந்த சொத்துக்களையும் பாத்தியப்படுத்தி எந்த ஆவணங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி எங்களுடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். மரகதம் ஏற்படுத்திக் கொடுத்த உயில் ஆவணத்தில் சாட்சிகளாக யார் யார் கையப்பம் செய்து உள்ளார்கள் என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

20. இந்த வழக்கின் 2 முதல் 4 வாதிகள் எங்களுக்கு உயில் ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்ட வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். செல்லமாலும் மூன்றாம் பிரதிவாதி சேதுபதியும் அவர்களுக்கு உயிர் ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியம் பெற்ற வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. செல்லம்மாளுக்கு உயில் ஆவணத்தின் படி எழுதி கொடுத்த வீட்டில் வசித்து வருகிறார்கள் செல்லம்மாள் கணபதி பாளையத்தில் வசிக்கிறார் என்றால் அங்கேயும் வசிக்கிறார்கள் அவருக்கு எழுதிக் கொடுத்த வீட்டிலும் வசிக்கிறார்கள்.

21. சேதுபதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் இன்னும் இல்லை. சேதுபதி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. திருமணமாகி விட்டதா இல்லையா என்பதை பொருத்தும் எனக்கு தெரியாது. நாங்கள் வழக்கு சொத்திற்கு அருகில் கூட வசிக்காமல் பிரதிவாதிகளை மிரட்டி சொத்துக்களை அடைவதற்காக பொய்யாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மரகதம் அவருக்கு உயில் மூலமாக பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து தான் நல்ல மனநிலையில் இருந்த போது அந்த சொத்தை கடந்த 23.08.2016 அன்று மூன்றாம் பிரதிவாதிக்கு பாத்தியபடுத்தி சாட்சிகள் முன்னிலையில் ஒரு உயில் ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்து காலமாகிவிட்டபின் அதன் அடிப்படையில் மூன்றாம் பிரதிவாதி மேற்படி சொத்தை அடைந்து முழு உரிமையுடன் சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

22. மேற்படி சொத்தை பொறுத்து மூன்றாம் பிரதிவாசி தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்து வரிவகைகள் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக இருந்தால் நாங்கள் குறைந்தபட்சம் ஒரு ஆட்சேபனையாவது செய்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் இருந்தது. நானும் என் சகோதரர்களும் கடைசி காலத்தில் நிம்மதியாக வாழ விடாமல் மரகதத்தை துன்புறுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல.

23. அதனால் தான் மரகதம் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உண்மையை மறைத்து நாங்கள்

இந்த வழக்கில் வாதம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் மரகதம் ஏற்படுத்திக் கொடுத்த உயில்சாசனத்தை ஆட்சேபிக்க எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகளாகிய எங்களின் விலாசம் வெள்ளகோவில் உள்ளதாக நாங்கள் சொல்லி உள்ளது தவறு என்றும் நாங்கள் யாரும் வெள்ளக்கோவிலில் வசித்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்ததால் தான் சரவணன் என்பவர் எங்களுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்ய முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல நாங்கள் தாக்கல் செய்துள்ள பொய் வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.11.05 18:59:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்